**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**Spl. Case No.1/2019**
**Prosecution Witness P.W. 31**

.....

Name : திரு. K.அசோகன் Calling :

Father's name : திரு. A.கண்ணையா Religion :

Village : Age :

Taluk :

நாள் - **07.02.2026**

**(1 ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 2 ம் எதிரி - ஆஜர்).**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். நான் சௌத் மெட்ராஸ் கேஸ் கம்பெனியில் வேலை பார்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். தமிழரசி என்பவர் எவ்வளவு கேஸ் கனெக்சன் வாங்கினார்கள் என்று போலிசார் என்னிடம் கேட்டார்கள், ஏனென்றால் நான் அப்போது கேஸ் கம்பெனி குடோனில் பணிபுரிந்தேன். மேற்படி தமிழரசி என்பவர் மதுரையில் கார்த்திகேயன் கேஸ் ஏஜென்சியில் 19.06.2006 ம் தேதி சென்னைக்கு மாற்றம் செய்து வந்தார்கள். அவர் 2011 வரை சென்னையில் கேஸ் கனெக்சன் வாங்கினார். அதுசம்பந்தமான ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கம்ப்யூட்டரை பார்த்து அலுவலகத்தில் எழுதி கொடுத்தார்கள், 43 கனெக்சன்கள், 17.05.2011 வரை தமிழரசி வாங்கியுள்ளார், திரும்பவும் மதுரைக்கு மாற்றம் செய்து வந்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்னுடைய அலுவலகத்தில் வழங்கியது தான், அது **அ.சா.ஆ.43 வரிசை** ஆகும் (மேற்படி ஆவணம் எதிரி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). மேற்படி தமிழரசி 28.04.2011 வரை கனெக்சன் வாங்கியுள்ளார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>1 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரணையின் போது, எங்களது இந்தியன் கேஸ் நிறுவனத்திற்கு இன்டென் ஆயில் கார்ப்ரேசன் செய்து கொடுத்த கம்ப்யூட்டர் சிஸ்டத்தின் படி எங்கள் கேஸ் ஏஜென்சியில் இருந்து, மாற்றலாகி சென்ற இணைப்புதாரர்களின் விபரங்கள் எதையும் எங்களிடம் வைத்திருப்பதில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எங்கள் கேஸ் நிறுவனத்தில் தொடர்ந்து கேஸ் சிலிண்டர் வாங்கி கொண்டிருந்தாலும், ஒரு வருடத்திற்கு மேல் இந்தியன் ஆயில் கார்ப்ரேசன் கொடுத்த கம்ப்யூட்டர் சிஸ்டத்தின்படி இணைப்புதாரர் வாங்கிய விபரங்கள் பதிவுகள் எதுவும் ஆவணங்களில் இல்லை என்ற விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

மேற்படி 1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.11 10:08:25 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**Spl. Case No.1/2019**

**Prosecution Witness P.W. 32**

.....

Name : டெய்சி Calling :

Father's name : நேசமணி Religion :

Village : Age :

Taluk :

நாள் - **07.02.2026**

**(1 ம் எதிரி ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 2 ம் எதிரி - ஆஜர்).**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பரமக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவேன். நான் போலிசார் விசாரணையில் நான் 2000 ம் வருடம் முதல் ரோஜா வீதி, பாரதி நகர், பரமக்குடியில் குடியிருந்து வந்தேன். அந்த வீடு ஏற்கனவே ராஜூ என்பவருக்கு சொந்தமான வீடு ஆகும். 2006 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தமிழரசி அவர்களின் கணவர் ரவிக்குமார் அந்த வீட்டை வாங்கினார். அவர் வாங்கியதில் இருந்து ரூ.50,000/- முன்பணமும், மாதம் ரூ.5,000/- வாடகையாக செலுத்தி வந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வாடகை ஒப்பந்தத்தின் நகல் ஆகும், அது **அ.சா.ஆ.44** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1 ம் எதரி தரப்பில் குறுக்குவிசாணை இல்லை என்றுதெரிவிக்கப்பட்டது. (வழக்கறிஞர் மூலம்)

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் மேற்படி வீட்டை 2011 ம் வருடம் ஜூலை மாதம் காலி செய்துவிட்டேன். அந்த காலகட்டங்களில் சரியான முறையில் வாடகை செலுத்தி வந்தேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.02.11 10:08:41 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.